# உணவில் எச்சில் துப்பிய சம்பவம்:
# 2 உணவகங்களுக்கு அபராதம்



கோலாலம்பூர், அக். 27- வாடிக்கையாளருக்கு உணவை கட்டிக் கொண்டிருந்த பணியாளர் ஒருவர் அதில் எச்சில் துப்பிய சம்பவம் காணொளியாகப் பகிரப்பட்டு வந்ததைத் தொடர்ந்து தலைநகரிலுள்ள இரண்டு நாசி கண்டார் உணவகங்களுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் அபராதம் விதித்தது.

இச்சம்பவம் பப்ளிக்கா, டேசா ஸ்ரீ ஹர்த்தமாஸ் உணவகங்களில் நிகழ்ந்ததாக அடையாளம் காணப்பட்ட பின்னர் அவ்விரண்டு உணவகங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டதாக அது தனது ஃபேஸ்புக்கில் கூறியது.

அவ்விரண்டு உணவகங்களையும் சோதனையிட்டபோது அவ்விரண்டும் முறையான லைசென்ஸ் பெற்று செயல்பட்டு வருவதாகவும் தெரிய வந்தது என்றார்.

பப்ளிக்கா உணவகத்தைச் சோதனையிட்டபோது அதன் பணியாளர்கள் தலைமுடியை மூடவில்லை என்பதோடு மேலும் சில தொழிலாளர்கள் தைப்பாயிட் தடுப்பூசியையும் போட்டிருக்கவில்லை என தெரிய வந்தது என்பதால் அதற்கு 2 அபராதங்கள் விதிக்கப்பட்டன.

அதேவேளையில், அதன் சமையலறை அசுத்தமாகவும் எண்ணெய் படிந்து இருந்ததோடு, தரையில் மாவு கொட்டிக் கிடந்தது என அது நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

கோலாலம்பூர் செயல்படும் அனைத்து உணவகங்களும் சுத்தத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் உறுதியாக உள்ளது எனவும் அது கூறியது.